# தமிழ்த் தாய் மன்றம்

**தமிழ் முறைத் திருமணம் செய்து வைத்தல்.**
(திருக்குறள் ஓதிச் செய்து வைத்தல்)

**தமிழ்ப் பெயர் உள்ள குழந்தைகளுக்கு பரிசு வழங்குதல்...**

**தமிழர் நாவில் தனித்தமிழ்**
**தமிழர் நிகழ்வுகளில் தனித்தமிழ்**

**தமிழ்த்தாய்**
**பொன்னால் முடி புனை நாள்**
**யாம் செய்வோம்.**

**கூடுதலான விவரங்களுக்கு:**
**416 893 9545 / 416 471 8019**

## இலக்கிய அமர்வு:

# போராளிக் கவிஞர்களின் போர்க் கால கவிதைகள்!

**தமிழ்த் தாய் மன்றம், கனடா**

*செத்தெம்பர் 09, திருவள்ளுவர் ஆண்டு 2048*

# வல்லரசுகள்

**-கப்ரன் கஸ்தூரி**

வல்லரசுகளே
நீங்கள்,
வாழ்வதற்காக
வாழ்பவர்களை
வதைப்பவர்கள்.

உங்கள் வல்லமைகள்
ஆய்வு செய்யப்படுகையில்
வளர்முக நாடுகளே
வாழா வெட்டியாகின்றன.
நீங்கள்
நிலவில்
வரலாறு படைக்க
மண்ணை
மான பங்கம் செய்பவர்கள்.

வறுமையும் பிணியும்
உங்கள்
வருகையால்
வளர்க்கப்படுபவை.

உங்கள்
தேசத்து
செஞ்சிலுவைச் சங்கங்களும்
சேதங்களைச் சேகரிப்பதில்லை:
இருப்புக்களையே
எண்ணிப் பார்க்கின்றன.

உங்கள் நாட்டுக்
கணக்காய்வாளர்கள்
இறப்புக் கணக்குகளை
இருப்புப் பக்கத்தில்
பதிந்து காட்டும்
பட்டதாரிகள்.

உங்களோடு
சம்பந்தம் செய்து கொண்ட
சமாதான நாடுகள்
இங்கு
பிரசவித்துக் கொண்டது
பிரச்சனைகளைத்தான்.

உங்கள்
விமான நிலையங்கள்
விஸ்தரிக்கப்படுகையில்
எங்கள்
குடிசைகள் அல்லவா
கொளுத்தப்படுகின்றன!
சமாதான நாடுகளில்
சாமத்தியமாய்
நுழைந்து
ஆணி வேரை
அறுத்துவிட்டு
வாடாது நிற்க
நீர் ஊற்றுபவர்கள்.

உங்கள்
தலையீடுகளால்
தரைமட்டமாகிப் போன
தேசங்களே
அதிகம்.

நீங்கள் பரவிய
எயிட்ஸ் இங்கே
இயற்கையானதல்ல
என்ற பின்பு,
காற்றும் மழையும் கூட
சந்தேகப் படுகின்றன.

நாளைய செயற்கைப் புயலுக்கு
சொந்தம் கொண்டாடப் போகும்
சர்வதேசப்
பயங்கர வாதிகள் நீங்கள்.

("வெற்றுடல்கள் அல்ல அவை வெடி மருந்துப் பொதிகள்" எனும் கவிதைத் தொகுதியில் வெளியாகியது.)

# தமிழ்த் தாய் மன்றத்தின் உறுதி மொழி!

**தமிழர் நாவினில்
தனித் தமிழ்
தமிழர் நிகழ்ச்சிகள்
எங்கினும்
தனித் தமிழ்**

**தமிழ்த் தாயே
உனக்கு
பொன்முடி
புனை நாள்
யாம் செய்வோம்**

**தமிழின் வாழ்வே
தமிழர் வாழ்வு.**

**தாயே தமிழே நின் தாழ் பணிவோம்**

(தமிழ்த் தாய் மன்ற நிகழ்வுகள் ஆரம்பிக்கும் போது எடுத்துக் கொள்ளப் படும்)

# உயரும் என் குரல்!

-மலைமகள்

ஏன் இது இப்படி?
எவருக்கென்ன தூரோகம் செய்தேன்
எனக்கிந்த துன்பம் நேர?
என் மனதறிந்து கனவில் கூட
எவரையும் புண்படுத்திய
நினைவில்லையே.
ஏன் இந்த அவலம் எனைச்
சூழ்ந்தது?
உயிர் வாழ்வதன்றி
வேறொன்றறியாத
எம் உறவுகள் மண்ணோடு போக.
உளம் புண்ணாகி உடல் சோர்ந்து
வீதியிறங்கி
வியர்வைத்துவாரங்களால் இரத்தம்
கசிய
கதறியழுது அலையும் வாழ்வு
ஏன் எனக்கு வந்தது?
என்னைப்போலவே
இன்னும் சிலரின் ஆன்மாவும்
இப்படிக் கதறக்கூடும்.
மனதை மிதிக்கும் அரக்கச்சூழலில்
நசியுண்டிருக்கக்கூடும்.
என்னைப் போலவே அவர் விம்மலும்
தொண்டைக் குழியில் சிக்கி
நெருக்குண்டு புதையுண்டு
கிடக்கக்கூடும்.
உள்ளக் கொதிப்பால் சூடேறி
வெந்நீராய் வழியும் என் கண்ணீரை
புதையுண்டுபோன மனிதரும்
புதைக்கச் சொன்னவரும் அறியாமல்
போகலாம்.
போகட்டும் பரவாயில்லை
நான் உரத்துக் கத்துவேன்
புதைக்கச் சொன்னவர் எவரோ
அவரின் நிம்மதியழியும் வரைக்கும்
நான் கத்துவேன்
இனியும் எவரையும் எதையும்
புதைக்க நினைக்கவும் முடியாமல்
அவர் அமைதி குலைந்து ஆன்மா
அலைந்து
உடல்நடுங்கி இதயம் சிதைந்து
வாய் பிதற்றும் வரையில்
நான் கத்துவேன்.
ஒரு சொல்
ஒரே ஒரு சொல்
கதைப்பதற்கும் வழியின்றி
புதைக்கப்பட்ட
அத்தனை மனிதருக்குமாய்
அடிவயிற்றிலிருந்து எழும் என்
கதறல்

செம்மணி வெளிகடந்து
பிரபஞ்சமெங்கும் பரவும்
நட்சத்திரங்களை உலுக்கும்
புயலின் திசையை மாற்றும்
எரிமலையின் குமுறலையும்
பூகம்ப அதிர்வையும்
புதைக்கச் சொன்னவர் வீட்டு
முற்றத்துக்கு வரவழைக்கும்.
கடைசி மூச்சை அவர் விடும்
கணத்திலும்
காதுக்குள் இரையும்.
மண்ணுக்குள் புதைக்கப்பட்ட
மனிதரை
எழுப்பும் வல்லமை எனக்கில்லை.
ஆனால் கொல்லச் சொன்னவரை
உயிருடன் உலவும் பிணங்களாக்க
என் குரலுக்கு இயலும்.
வாய் கிழிந்து நரம்பு பிளந்து
குருதி வழிகையிலும் என் குரல்
அதிரும்.
ஆதிக்கக் கோட்டைகள்
உதிரும்வரையில்
எனது குரல் உயரும்.

# விடிவிற்காய் எழுவோம்!

- மேஜர் பாரதி

இரவொன்று கரைந்து
போக
இன்னும் சில நேரம்
மீதமிருக்கும்
புதுநாளின் பிறப்பிற்காய்
புள்ளினங்கள் பாட்டுப்பாடும்
ஒரு அதிகாலைப் பொழுது
அது.
பனிமழையில் நனைந்தெழுந்த
பனைமரங்கள் சிலிர்த்து
நிற்கும்.
பற்றைகளும் கூட ஒரு
புத்துணர்ச்சி பெற்றிருக்கும்,
பட்டாசு வெடிபோல
கிட்டவாய் சத்தம் எழும்
முன்னுக்கு பின்னுக்கு
முதுகுக்கு மேலாக - எம்
உயிரைத் தொட்டணைக்க
உலங்கு வானூர்தி குண்டு
துடிக்கும்.

இன்றுவரை அருகிருந்து
அம்மாவின் கதை சொன்ன
அன்பு நண்பியின்
ஆயதம் அணைத்திருந்த
கரம் விறைத்து வீழும்,
செங்குருதி இம்மண்ணில்
புதிதாய் படம் வரையும்.

இம்மண்ணின்
இளம் புதல்வி ஒருத்தியின்
உயிர் இழந்த உடல் ஒன்று
எம்முடன் இருக்கும்.
கனல்கக்கும் எம்விழிகள்
கலங்கி இருக்க அவள்
கைப்பிடித்த துப்பாக்கி
கரம் மாறும்.
சடசடக்கும்.
எம் வேகம் அதிகிரிக்க
பட்டாசு வெடிச் சத்தம்
தூரக் கேட்கும்.

பெற்றெடுத்த புதல்வி
பெருமகளாய்ப் போனதனால்
பூமித்தாயின் சோக நிலையாய்
மௌனம் பிறப்பெடுக்கும்
சிதைந்துபோன பனைமரமும்
சிறகொடிந்த குருவிகளும்
பற்றி எரிந்த பற்றைகளும்
எம் மண்ணின் விடுதலைக்காய்
ஏந்திய வடுக்களால்
இன்னும் நிமிர்ந்து நிற்கும்.

குச்சொழுங்கைக் குறுணிகளும்
குவிந்திருந்து குண்டுகளாய்
மாற
தீர்மானம் எடுக்கும்,
குருதிச் சேற்றில்
பதியும் என் கால்கள்
குறிக்கோளை நோக்கி
விரைந்தோடும்.
நினைவுகளைத் தாங்கும்
என் விழிகள்
அடுத்த விடியலுக்காய்
காத்திருக்கும்.

# சாலப் பொருந்தும் சட்டம் வந்தாச்சு "ஏலவிற்பனை" இனியிங்கில்லை!

## உலைக்களம் - வியாசன்

மின்னாமல் ஒரு ஆனந்தப் பேரிடி
எம் மண்ணில் இறங்கியது.
நிலம் கிழித்தோர் நீரூற்று
குபுகுபுவென்று கொப்பளித்துப்
பூமியை நனைத்துப் போகின்றது.
எந்த ஆரவாரமுமற்று
அக்கினிக் குஞ்சுக்கு அடைவைத்து விட்டோம்,
நாளை பொரிக்கும்.
பொல்லாப் பிழையைப் பொசுக்கும்
பெரிய மலையைப் புரட்டுவதற்காக.......
அடிவாரத்தில் அலவாங்கு குத்திவிட்டோம்
நாளை மலை சரிந்துபோக
சமநிலையிங்கு தர்மமாகும்.
உள்ளே கொதிக்கும் உலைக்களங்கள்
இனி ஆறி அடங்கும்.
சுடுமூச்சாகி சுவரிடிக்கும் பெருமூச்சுக்களின்
சோகமினித் தொலைந்து போகும்.
மலரில் மதுவருந்தி மயங்குவதற்காக
வண்டுகளுக்குப் பூக்கள் வரதட்சணை கொடுப்பதில்லை,
காளை மாட்டுக்குக் கல்யாணச் சீர்கொடுக்கும்
பழக்கமேதும், பசுமாட்டுக்கில்லை,
ஆண்நாண் பெண் நாயிடம்
ஆறலட்சம் கேட்பதில்லை
மானிடத்திற்கு மட்டும் ஏனிந்த இழிநிலை
அதுவும் தமிழனென்றால்........
பிள்ளையை விற்பதில் அவனே பெரிய புள்ளி
மதங்களேதும்
மணக்கொடையை ஆதரிக்கவில்லை
தெய்வங்களெவரும்
சீதனம் வாங்கியதாகத் தெரியவில்லை.
பார்வதிக்கு பாதியுடல் கொடுத்து
பரமசிவன் அர்த்தநாரீஸ்வரரானார்.
சரஸ்வதியை நாக்கிலே தூக்கிவைத்து
பிரம்மா பெரிய கடவுளானார்.
உள்ளே சென்று உற்றுப்பார்த்தால்
ஆண்டவன் சந்நிதானங்கள் அனைத்திலும்
ஆணும், பெண்ணும் அரைவாசியே
பெண்ணைச் சக்தியென்கின்றார் பாரதியார்
பெரும் சக்தியென்றார் விவேகானந்தர்
தாய்மையின் வடிவமென்றார் பரமஹம்சர்
இவையொன்றும் காதல் வாழ்வுக்குகக்
கைகொடுக்க மாட்டாது என்றாலும்,
பெண்ணே பெரியவள்
மாதா: சக்தி
மனைவி: பெரும்பொருள்
மகள்: பிரமிப்பின் பேரொளி.
காதல் குளிப்பில் உடலாறும்போதுதான்
மனிதன் "ஞானி" ஆகின்றான்
அந்தக் குளியலுக்கு எவனும் காசு வாங்கினால்
அவன் "பாவி" ஆகின்றான்.
பத்துலட்சம் காசும்,
பன்னிரண்டு பரப்புக்காணியும்
நாற்பது பவுணில் நகையும் வாங்கி
ஏலத்தில் தனனைக் கூவிவிற்றவன்
எந்த முகத்தோடு முதலிரவுக்கு கதவுமூடுவான்?
காசுக்குத் தன்னை விற்றவன் வீட்டில்
மகிழ்ச்சியாகக் கட்டிலும் ஆடாது
மனநிறைவோடு தொட்டிலும் ஆடாது.
மீசை முளைத்தொன்றை வாங்கும் வழியற்று
இரவில் நட்சத்திரங்களை எரித்தபடி
எடுத்ததெற்கெல்லாம் எழுந்து விழுந்தபடி
நரையெறிந்து,
நடைதளர்ந்து,
கோடை மரமாகி இலையுதிர்ந்துபோகும்
முதிர்கன்னியரின் வாசல் கடந்து
கலியாண ஊர்வலம் போகும்பொழுது
யன்னல் கம்பிகளால் முகம் உரசி
தீ மூட்டியபடி
அவர்கள்விடும் அக்கினி மூச்சின் அர்த்தம்
எத்தனை பேரைத் தைத்தது?
"மணக்கொடைத் தடைச்சட்டம்"
இது புரையோடிய புண்ணிற்கு
தலைவன் செய்த சத்திரசிகிச்சை
அதர்மத்தின் அடிமுடியை நீறாக்க
பிரபாகரன் இட்ட பெருநெருப்பு
போகப் பொருளாகவும் காமப்பொருளாகவும்
பெண்ணை எதிர்கொள்ளும் புன்மை தீருமட்டும்
பேச்சளவில் மட்டுமே பெண்விடுதலை
ஆணாதிக்கத்தின் வேர்கள்
ஐந்துகண்டங்களையும்,
ஏழு கடல்களையும் கடந்து
எங்கும் நிறைந்துள்ளது.
அது ஆவரங்காலிலும் உண்டு
அமரிக்காவிலும் உண்டு
விகிதாசாரத்தில் கொஞ்சம் வேறுபாடு
அவ்வளவே,
பெண்ணாகப்பட்டவள்
பானை கழுவி , படுக்கை தட்டிப்போடும்
கண்திறந்து மூடும் யந்திரமல்ல
பேசாப் பொருளாகி ஏவலியற்றும்
"றிமோட்கொன்றோல்" பொம்மையல்ல
ஆணைப்போல் அவளுக்கும்
சரியாசனம் வேண்டும்
அரியாசனமும் வேண்டும்
கண்ணகியை உதறிவிட்ட கோவலன்
இன்னொருத்தியுடன் போனான்
"மாசாத்துவான்" மகனுக்கு
மடிவற்றிப் போனதும்
காற்சிலம்பு கேட்டு
அவள் காலடிக்குத் திரும்பினான்.


பொருளுக்கும் போகத்துக்குமா
பெண்ஜன்மம்?
நிலவுடமைக் காலத்தில்
பெண்ணுக்கு நீதிகிட்டவில்லை
பொருளுடமைச் சமூகத்திலும்
அவள் பெருமையடையவில்லை,
இன்று வரையும்தான்
அவளின் இடர்தீரவில்லை.

"சீனத்து மாநாட்டுத் தீர்மானம்"
என்ன செய்யும்?
ஒரு பாட்டம் அழுதுவிட்டு ஓய்ந்துபோகும்.
இன்று கண்திறந்தது எங்கள் மண்.
போராட்டம் பெண்ணுக்குப்
புதுவாழ்வு தந்தது.
குச்சொழுங்கையெங்கும் பெண்ணின்குரல்
குதாகலிக்கின்றது.
பேரிகையொலிக்கப் பெண்மை நிமிர்ந்து
சூரியனைத் தொட்டு நிற்கிறது.
அவளின் விழிநீர் துடைக்க ஆயிரம் கரங்கள்
ஊரதிர நிமிர்ந்த வாழ்வு
பாரதி சொன்ன
"திமிர்ந்த ஞானச் செருக்கு"
"வாடகைக் கனவுகள்"
வல்லமை வடிவாய்
பாடுகின்ற விடுதலைப்பண்.
எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிக்குள்ளும்
இடரழித்து விட்ட இறுமாப்பு.
ஆகாயம் வந்து அடிபணியும் அதிசயம்.
"மணக்கொடைத் தடைச்சட்டம்."
புதிய பாய்ச்சல்
விற்பனைப்பொருளாய் வீட்டில் முடங்கிய
அற்புதங்களே எழுவீர்!
சாலப் பொருந்தும் சட்டம் வந்தாச்சு
ஏலவிற்பனை இனியிங்கில்லை.

நிகழ்வின் தலைமைப் புரவலர்....




நிகழ்வின் துணைப் புரவலர்....






தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்

# மீண்டும் பிறக்கின்றோம்!

**- அம்புலி**

காட்டு மிராண்டிகளாய்
ஆதிவாசிகள் என் கண்ணெதிரே
வந்தனர்.
என்னினக்குழுமத்தின்
மேலுள்ள கோபத்தில்
என் மனிதர்களைக் கொன்றனர்
என்னவர் தேடிய தேட்டங்களைக்
பெண்டிரைப் பிள்ளைகளைப் பலியிட்டு
இரத்தவெள்ளத்துள் கிடக்கும்
என்மேல் ஏறிமிதித்துக்
கூக்குரலிட்டபடியே சென்றனர்.
விழிபரப்பிய இடமெங்கும் பிணக்காடு
கற்காலத்தில் விரியாத
சிந்தனைத் திறனோடு
அவர் செய்வதைத் தடுக்கப்
போரிட்ட என்மாந்தரிற்
தவறில்லையே
குருதி பீறிடத்துடிக்கும்
எனக்காய் மனித உரிமை பேச
அன்று எவருமே இருக்கவில்லை
போர் மரபை மீறுவது பற்றியும்
சமாதான வழிபற்றியும்
பேச்சுவார்த்தையின் அவசியம்
பற்றியும்
கூற முன்வருவதற்கு
அமைப்புக்கள் இருந்ததாகவும்
தெரியவில்லை.

காலமாற்றங்களுடன்
கணணி ஏந்திய கோலத்தவராய்
நான் சிறைப்பட்டுக் கிடந்த
சிங்க நகரத்துச் சிறைக்கூடத்துள்
எப்படி இவர்கள் புகுந்தார்கள்?
போரில் கைதாகிய படைவீரர்களை
நல்லெண்ண அடிப்படையில்
சிங்கள உறவுகளிடம் கையளிக்கும்
போர்மரபு தெரிந்த
ஒரு தலைவனின் தேசத்திலிருந்து
அப்பாவியாய் வந்த என்னைச்
சிறைக்கூடத்துள் ஏன் வதைத்தார்கள்?
கைதாகும் போது
முரண்டுபிடிக்கவில்லை
வதைப்படுத்தியவரைத்
திருப்பியடிக்கவில்லை
புத்தனின் போதனை
யுத்தமெனக் கொண்டவர்க்கு
மறுகன்னத்தைக் காட்டிய
மானுடனாயிருந்தேன்
எனது போர்க்குணம் சிறுத்து
பெட்டிக்குள் அடங்கியிருந்தது.

ஆம் அதுதான்
வெலிக்கடையில் பூசாவில்
பிந்துனுவெவவில்
மீட்சி தரவந்தார்கள்
இந்தக் காட்டுமிராண்டித் தேவதைகள்
சமர்க்களங்கிளில் கண்ட
தோல்விகளுக்கு சமன்பாடு செய்ய
எம்மைச் சாகடித்தார்கள்.
அவர்கள் குதறியெறிந்தவர்களின்
குரதித்துளிகளிலிருந்து
எமக்காய் இலவுகாத்த
உறவுகளின் விழி நீரிலிருந்து
நாங்கள் மீண்டும் கருக்கொள்கின்றோம்
ஒரு அப்பாவித் தமிழிச்சியின்
கருப்பையிலிருந்தல்ல,
சிங்கபுரச் சிறைக்கூடங்களிலிருந்தே
பிறக்கப்போகின்றோம்.
எமது ஆன்மத்தின் கனவிலிருந்து
புறப்படுகின்றது இந்தச்
சூறாவிளிகளின் சுயம்.

போர்த் தளபாடங்களுடன்
படைமுகாம்களிலே
எமது மண்ணிலும்
சிறயுற்றுக் கிடக்கின்றார்கள்
சிங்கவீரர்கள்.
அவர்களது சடலங்கள் வரட்டும்
அப்பாவிகளைப்
புலியாய் மாற்றிய
அரசி (சு)க்கு அன்று
அனுப்புவோம் அனுதாபக்கடிதம்!